Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 69 of 2025

## Deposition of P.W.10 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர். சீனிவாசன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of April 2026.

(A1 present. A2 absent. Petition U/s.355 BNSS is filed and allowed.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபிரிந்து வருகிறேன். கடந்த 16.09.2024ம் தேதி நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிக்சை பிரிவில் அலுவல் மருத்துவராக பணிபுரிந்த போது இரவு 11.03 மணிக்கு தனியார் ஆஸ்பத்திரி மூலம் மனோஜ் என்பவரை சிகிச்சைக்காக கொண்டு வந்தார்கள். அவருடன் வந்த உறவினர்களை விசாரித்தபோது, இரண்டு அடையாளம் தெரிந்த நபர்கள் அவரை அடித்துவிட்டதாக சொன்னார்கள். மனோஜை பரிசோத்து பார்த்தபோது அவருக்கு நாடித்துடிப்பு இல்லை. அவரது இறப்பை உறுதிசெய்த பிறகு, பிணக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.9 ஆகும். மனோஜ் இறந்து போன விவரத்தை ஜேடர்பாளையம் புறக்காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து அனுப்பினேன். நான் கொடுத்து அனுப்பிய தகவல் அ.சாஆ.10 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, மனோஜை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வந்தார்கள் என்றும், அவரது உடலை பிணக்கிடங்கிற்கு அனுப்பி வைத்த பிறகு, ராமலிங்கம் என்பவருக்கு செல்போன் மூலம் இறந்த விவரத்தை தெரிவித்தேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விசாரித்த நபர் சம்பவம் தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப் அருகில் நடந்ததாக என்னிடம் சொன்னார். மனோஜிற்கு ஏற்பட்டிருந்த வெளிப்புற காயங்களை நான் சரியாக கவனிக்கவில்லை. விபத்து பதிவேடு நகலில் கொண்டு வந்தவர் என்ற இடத்தில் "தனியார் ஆம்புலன்ஸ்" என்று சொல்லியுள்ளேன். இடது ஓரமாக இடைசெருகலாக தகவல் கொடுத்தவர் ராமலிங்கம் சித்தப்பா என்று சொல்லியிருக்கிறேன். வழக்கு சம்பவம் பற்றி தெளிவாக தகவல் பெற இயலவில்லை என்று சொல்லியிருக்கிறேன். போலீஸ் இன்டிமேசனில் ராமலிங்கம் பெயர் இல்லை. புறக்காவல் நிலையம் மூலம் ஜேடர்பாளையம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன். விபத்து பதிவேட்டில் முதலில் ராமலிங்கம் பெயரை எழுதவில்லை என்றும், அவர் மனோஜ் உடன் வந்தார் என்பதை காட்டுவதற்காக போலீசார் சொல்லி பின்னால் அவரது பெயரை எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.